# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2016.08.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கைப் பொறியியற் பேரவை

**உயர்தொழில் நியமங்களையும் பொறியியல் தொழிலர்களின் நடத்தையையும் பேணுவதற்குப் பொறுப்பாகவிருக்க வேண்டிய இலங்கைப் பொறியியற் பேரவையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; வெவ்வேறு வகுதியினரான பொறியியல் தொழிலர்களைப் பதிவுசெய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

*மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *23.00***  **தபாற் செலவு : ரூபா *15.00***

ச.வ.ஓ. 35/2011

**உயர்தொழில் நியமங்களையும் பொறியியல் தொழிலர்களின் நடத்தையையும் பேணுவதற்குப் பொறுப்பாகவிருக்க வேண்டிய இலங்கைப் பொறியியற் பேரவையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; வெவ்வேறு வகுதியினரான பொறியியல் தொழிலர்களைப் பதிவுசெய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம் , 2016ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

## பாகம் I

### இலங்கைப் பொறியியற் பேரவையைத் தாபித்தல்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) இலங்கைப் பொறியியற் பேரவை எனவறியப்படுவதுமான பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கைப் பொறியியற் பேரவையைத் தாபித்தல்.

(2) பேரவையானது (1) ஆம் உப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

2-PL 010081 - 425 (2016/07)

**3.** பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *பேரவையின் அமைப்பு.*

*(அ) நான்கு பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-*

*(i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டவர்களும் என பொறியியற் பீடங்களின் மூன்று பீடாதிபதிகள் அல்லது பேராசிரியர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவர்களான அவர்களின் பிரதிநிதிகள்;*

*(ii) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மூன்றாம்நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப் பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி;*

*(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமன உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களும்) பின்வரும் முறையில் பிரதம அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களுமான பதின்மூன்று உறுப்பினர்கள்:-*

*(i) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஏழு பட்டயம்பெற்ற பொறியியலாளர்கள்;*

(ii) *1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கையின் கூட்டிணைக்கப்பட்ட பொறியிய லாளர்கள் நிறுவனத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்;*

(iii) *இலங்கைப் பொறியியற் சேவையினால் பெயர் குறித்துநியமிக்கப்பட்ட இரண்டு பட்டயம்பெற்ற பொறியியலாளர்கள்.*

*பேரவையின் தவிசாளர்.*

**4.** *(1) பிரதம அமைச்சர், பேரவையின் தவிசாளராகவிருப்பதற்கு, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து பட்டயம்பெற்ற பொறியியலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.*

*(2) பிரதம அமைச்சரின் அங்கீகாரமின்றி, தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளுக்கு வெளியே ஏதேனும் சம்பளம் பெறும் தொழிலில் ஈடுபடுதலாகாது.*

*(3) தவிசாளர், பிரதம அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாமென் பதுடன், அத்தகைய பதவிவிலகுகை, அது எத்தேதியன்று பிரதம அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.*

*(4) பிரதம அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.*

*(5) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் அவர் பேரவையில் உறுப்பாண்மைவகிக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.*

*(6) சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத்*

தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, பிரதம அமைச்சர், வேறெவரேனும் பட்டயம்பெற்ற பொறியியலாளரை, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கலாம்.

*உறுப்பினர்களின் நிதிசார் அக்கறை.*

**5**. (1) பிரதம அமைச்சர், ஆளொருவரைப் பேரவையின் உறுப்பினராக நியமிக்குமுன்னர், பேரவையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறாகப் பேரவையின் அலுவல்களில் நிதிசார் அல்லது வேறு அக்கறையெதனையும் அவர் கொண்டிருக்கவில்லையென்பது பற்றி தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(2) பேரவையின் உறுப்பினரெவரும் நியமிக்கப்பட்டபின்னர் அத்தகைய ஏதேனும் அக்கறையைக் கொண்டிருக்கவில்லையென்பதுபற்றி பிரதம அமைச்சர் காலத்துக்குக்காலம் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதலும் வேண்டும்.

(3) (அ) பேரவையினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் எவ்வகையிலும் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறை கொண்டுள்ள பேரவையின் உறுப்பினரொருவர் பேரவையின் கூட்டமொன்றில் அவரது அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வெளிவிடுகை பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வுறுப்பினர் அவ்வொப்பந்தம் தொடர்பாகப் பேரவையின் ஏதேனும் கலந்துரையாடலில் அல்லது முடிவில் பங்குபற்றுதலுமாகாது.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் பேரவையின் உறுப்பின ரொருவர் என்பது, தவிசாளரையும், நியமிக்கப்பட்ட உறுப்பின ரொருவரையும், பதவிவழி உறுப்பினரொருவரையும் உள்ளடக்கும்.

உறுப்பின ரொருவராக இருப்பதற் கெதிரான தகைமை யீனங்கள்.

**6**. ஆளொருவர் பின்வருமாறிருப்பின், அத்தகைய ஆள் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) பேரவையினால் அல்லது அதன்சார்பில் செய்துகொள்ளப் பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் வைத்திருந்தால் அல்லது துய்த்தால்;

(ஈ) பேரவையின் உறுப்பினரென்றமுறையில் அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்;

(உ) பேரவையிடமிருந்து முன்னங்கீகாரம் பெறாமல் பேரவையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு அவர் வருகைதராதிருந்தால்;

(ஊ) இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டில் வலு விலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்ற வராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(எ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்புவிடுக்கப்படாத கடனிறுக்கவகையற்ற அல்லது வங்கிமுறிந்த ஆளொருவராகவிருந்தால்; அல்லது

(ஏ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவிக்கின்றவராகவிருந்தால் அல்லது அனுபவித்தவராகவிருந்தால்.

பதவிவழி உறுப்பினர்கள்.

**7**. பேரவையின் ஒவ்வொரு பதவிவழி உறுப்பினரும், அத்தகைய அலுவலர் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்தப் பதவியை அத்தகைய அலுவலர் வகிக்கும் வரை பதவிவகித்தல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்.

**8**. (1) பேரவையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய,இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், ஒழுக்காற்று ஏதுக்களின்மீது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(2) பிரதம அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அதற்கென பிரதம அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய விலகுகை, அது பிரதம அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மேல், பயனுறுதலும் வேண்டும்.

(4) (அ) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறக்கும், பதவியிலிருந்து விலகும் அல்லது அகற்றப்படும்பட்சத்தில், பிரதம அமைச்சர், நியமிக்கப்பட்ட அக் குறிப்பிட்ட உறுப்பினரின் நியமனம் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரினிடத்திற் செயலாற்றவென வேறோராளை நியமிக்கலாம்.

(ஆ) பிரதம அமைச்சர், வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், பந்தி (அ)வின் நோக்கங்களுக்காக உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (அ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, பிரதம அமைச்சர், பிரிவு 3(ஆ) வின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றவென வேறோராளை நியமிக்கலாம்.

(6) முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி கழிந்தபின்னர் அவர் மீளநியமிக்கப்படும்வரை அல்லது பிரதம அமைச்சரினால் புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படும்வரை, தொடர்ந்து பதவிவகிக்கலாம்.

பேரவையின் கூட்டங்கள்.

**9**. (1) தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் சமுகமளிக்காதவிடத்து, சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் தம்முள்ளிருந்து அக் கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) (அ) பேரவையினால் முடிவுசெய்யப்படுவதற்கான எல்லாக் கருமங்களும் பேரவையின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன், சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) கூட்டமொன்றில் கவனத்துட்கொள்ளப்பட்ட ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் அக்கூட்டத்தின் தவிசாளர் அவரது மூலவாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) காரணங்களினால் ஆதாரப்படுத்தப்பட்ட பேரவையின் எல்லா முடிபுகளும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், பேரவையின் இலச்சினை அவற்றில் பொறிக்கப்படுதலும் வேண்டும்.

(3) பேரவையின் எவரேனும் உறுப்பினர், எழுத்திலான அறிவித்தல்மூலம், கூட்டமொன்றைக் கூட்டும்படி தவிசாளரைக் கோரலாமென்பதுடன், தவிசாளர், நியாயப்படுத்தப்படத்தக்க காரணங்களுக்காகவல்லாது வேறுவகையாக அவ்வாறு செய்வதற்கு மறுத்தலுமாகாது.

(4) பேரவையின் செயல், முடிபுகள் அல்லது நடவடிக்கையெதுவும், பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஒன்பது உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களைக் கொண்டுநடத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

இலச்சினை.

**10.** (1) பேரவையின் இலச்சினையானது, பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் இலச்சினையானது -

(அ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(ஆ) பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(இ) பேரவையின் வலுவளிப்பின்றியும் பேரவையின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமூகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) பேரவையின் இலச்சினை எந்த ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேரவை பேணுதல் வேண்டும்.

பேரவையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான ஊதியம்.

**11.** நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பிரதம அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, பேரவையின் உறுப்பினர்களுக்குப் பேரவையின் கூட்டங்களுக்கு வருகைதருவதற்கான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் II

### பேரவையின் தத்துவங்களும் பணிகளும்

**12.** இதற்கான அட்டவணை (அ)வில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்கின்ற பொறியியல் தொழிலர்களைப் பதிவு செய்கின்ற பணியானது பேரவைக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், — பேரவையின் பணிகள்.

பேரவையானது -

(அ) இச்சட்டத்தின் கீழ் பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றலும், அங்கீகரித்தலும் அல்லது நிராகரித்தலும் வேண்டும்;

(ஆ) பேரவையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பொறியியல் தொழிலர்கள் பற்றிய நிரலைக் காலத்துக்குக்காலம் வைத்திருத்தலும், பேணுதலும், வெளியிடுதலும் வேண்டும்;

(ஈ) பொறியியல் தொழிலர்களின் உயர்தொழிற்சார் துர்நடத்தை தொடர்பான ஏதேனும் கருமத்தின்மீது விசாரணைகளை நடாத்துதலும் வேண்டும்;

(உ) பேரவையின் பணியாட்டொகுதியினருக்குச் செலுத்தப் படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) இலங்கையில் பொறியியல் உயர்தொழிலைப் புரிதல் தொடர்பான கருமங்கள்மீது அரசாங்கத்துக்கும் இயைபான குழுக்களுக்கும் பிரதிநிதித்துவங்களைச் செய்தலும் வேண்டும்.

**13.** பேரவையானது பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:- பேரவையின் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல்,ஈடுவைத்தல், அடைமானம் செய்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஆ) பேரவையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரினால் அதற்கென விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது, பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணங்களைக் கடனாகப் பெறுதல்;

(இ) பணமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, கொடைகளையும், மானியக்கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவற்றைப் பயன்படுத்துதல்;

(ஈ) அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம், பதிவு தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களைத் தீர்மானித்தல்;

(உ) பொறியியல் தொழிலர்களின் பதிவினது நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானித்தல்;

(ஊ) அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம், பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கான படிவத்தையும் முறையையும் தீர்மானித்தல்;

(எ) பொறியியல் தொழிலர்கள் பற்றிய இடாப்புக்களைப் பேணுதல்;

(ஏ) பொறியியல் தொழிலர்களுக்கான உயர்தொழில்சார் நடத்தைக் கோவையொன்றைத் தயாரித்தல்;

(ஐ) பொறியியல் தொழிலர்களின் உயர்தொழில்சார் துர்நடத்தை தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கான நடவடிக்கைமுறையைத் தீர்மானித்தல்; அத்துடன்

(ஒ) பேரவையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், பதவி நீக்குதல் மற்றும் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அலுவலர்களின் சேவை நியதிநிபந்தனைகளை விதித்துரைத்தல்.

## பாகம் III

## பொறியியல் தொழிலர்களாகப் பதிவு செய்தல்

*பொறியியல் தொழிலர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்தல்.*

**14.** (1) பொறியியல் தொழிலர் எவரும், அத்தகைய பொறியியல் தொழிலர் 15 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டாலொழிய, பொறியியல் உயர்தொழிலைப் புரிவதில் ஈடுபடுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பொறியியல் உயர்தொழிலைப் புரிவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பொறியியல் தொழிலர் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள், 15 ஆம் பிரிவின்கீழ் தம்மைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் பொறியியல் தொழிலர் தவறொன்றைப் புரிகின்றார்.

**15.** (1) இதற்கான அட்டவணை 'அ'வில் குறித்துரைக்கப்பட்ட முறையான தகைமைகளையும் அனுபவத்தையும் திருப்திப் படுத்துகின்ற எவரேனும் பொறியியல் தொழிலர், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பொறியியல் தொழிலராகப் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

*பொறியியல் தொழிலராகப் பதிவுசெய்யப் படுவதற்கான விண்ணப்பம்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் முறையாக விண்ணப்பித்துள்ள எவரேனும் பொறியியல் தொழிலர், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது பதிவு செய்யப்படலாம்.

(3) பொறியியல் தொழினுட்பவியலர்கள் தவிர்ந்த எவரேனுமாள், பதிவுக்கான விண்ணப்பம் அத்தகைய ஆள் சேர்ந்துள்ள இயைபான உயர்தொழில்சார் குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தா லொழிய, பேரவையானது பொறியியல் தொழிலராகப் பதிவு செய்தலாகாது.

**16.** (1) பேரவையானது, பொறியியல் தொழிலரொருவர் பின்வரு மாறானவராக உள்ளாரெனத் திருப்திப்படின், பேரவை அத்தகைய பொறியியல் தொழிலரின் பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்:-

*பதிவை இல்லாதாக்குதல் அல்லது இடை நிறுத்துதல்.*

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய பதிவின் ஏதேனும் நியதிநிபந்தனையை மீறியுள்ளார்;

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்ற வராகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்;

(இ) பேரவையினால் நடாத்தப்பட்ட விசாரணையின்பின்னர் உயர்தொழில் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டுள்ளார்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது காரணங்களைக் கொண்டு பேரவையானது பொறியியல்தொழிலரொருவரின் பதிவை இல்லாதாக்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்டதாக உள்ளவிடத்து, பேரவை, அத்தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, பேரவை தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பதிவை இடைநிறுத்தலாம்.

(3) பேரவையானது, பதிவொன்றை இல்லாதாக்குவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்குமுன்னர், அத்தகைய பொறியியல் தொழிலருக்கு இல்லாதாக்குகை அல்லது இடைநிறுத்துகை பற்றிய அறிவித்தல் வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் அறிவித்தல், பேரவையின் அபிப்பிராயம் எந்த ஏதுக்களின் அடிப்படையின்மீதுள்ளதோ அந்த ஏதுக்களைக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொறியியல் தொழிலர் அதுகிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு மாதத்தினுள் அப்பதிவு ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது அல்லது இடைநிறுத்தப்படுதலாகாது என்பதற்கான எவையேனும் காரணங்களையும் எழுத்தில் பேரவைக்குச் சமர்ப்பிக்கலாம்.

(5) அத்தகைய பொறியியல் தொழிலர் அதற்காக விதிக்கப்பட்ட காலத்தினுள் காரணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் காரணத்தைக் கவனத்துட் கொண்டபின்னர், பேரவை, அத்தகைய பொறியியல் தொழிலரின் பதிவை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம் என்பதுடன், அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கலாம்.

(6) உயர்தொழில்சார் துர்நடத்தையாக அமைகின்ற செயல்களை அல்லது செய்யாமைகளை பிரதம அமைச்சர் ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைத்தல் வேண்டும்.

சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப் பெயர்களைப் பயன்படுத்துதல்.

**17.** (1) பதினைந்தாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு பொறியியல் தொழிலரும், அவர் -

(அ) பட்டயம்பெற்ற பொறியியலாளராகவிருப்பின், "CEng" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை;

(ஆ) இணைப் பொறியியலாளராகவிருப்பின், "AEng" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை;

(இ) சேர்நிலைப் பொறியியலாளராகவிருப்பின், "AflEng" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராகவிருப்பின், "IEng" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை;

(உ) பொறியியல் டிப்புளோமாதாரியாகவிருப்பின், "EngDip" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை;

(ஊ) பொறியியல் தொழினுட்பவியலராகவிருப்பின் "EngTec" என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப்பெயரை, பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொறியியல் தொழிலர் எவரும், அத்தகைய பொறியியல் தொழிலர் அவ்வகுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப் பெயரைப் பயன்படுத்தலாகாது.

வெளிநாட்டுப் பொறியியலாளர்களைப் பதிவுசெய்தல்.

**18.** (1) இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுப் பொறியியல் தொழிலரொருவர், விதித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் நிபுணத்துவத்தையும் தாம் கொண்டுள்ளாரென்றும், இலங்கையில் தாமே பிரசன்னமாகவுள்ளாரென்றும் அல்லது இலங்கையில் செயற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுமுயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிநாட்டு ஆக்கக்கூறின் வதிவுள்ள பிரதிநிதியாகவுள்ளாரென்றும் பேரவையைத் திருப்திப்படுத்தினால், தற்காலிகமாகப் பதிவுக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) பேரவையானது, பேரவையினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, விதித்துரைக்கப்பட்ட கட்டணக்கொடுப்பனவின் மீது வெளிநாட்டுப் பொறியியல் தொழிலருக்கு நான்கு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குத் தற்காலிகமாகப் பதிவை வழங்கலாம். அத்தகைய பதிவு அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அக்காலப்பகுதியின் முடிவில் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### மேன்முறையீடுகள்

**19.** (1) எந்தப் பொறியியல் தொழிலரின் பதிவு பேரவையினால் மறுக்கப்பட்டுள்ளதோ அல்லது எந்தப் பொறியியல் தொழிலரின் பதிவு 16 (5) ஆம் பிரிவின்கீழ் பேரவையினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் பொறியியல் தொழிலர் அத்தகைய முடிபு அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் 20 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

மேன் முறையீடுகள்.

(2) மேன்முறையீட்டுச் சபை, இயைபான எல்லாக் காரணிகளையும் கவனத்துட்கொண்டபின்னரும், தோதானதாகவும் நியாயமானதாகவும் இருக்குமிடத்தும்:-

(அ) மேன் முறையீட்டை அனுமதிக்கலாம், அல்லது வேறுபடுத்தலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

**20.** (1) பிரதம அமைச்சர், மேன்முறையீட்டுச் சபையொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

மேன் முறையீட்டுச் சபை.

(அ) பட்டயம்பெற்ற பொறியியலாளரொருவராக இருக்க வேண்டியவரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய வருமான உறுப்பினரொருவர்;

(ஆ) ஏனைய இரு பட்டயம்பெற்ற பொறியியலாளர்கள்; அத்துடன்

(இ) கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் இருவர்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள் நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டுச் சபையின் கூட்டங்களும் அலுவல்களும் எம்முறையில் நிறைவேற்றப்படவேண்டுமோ அம்முறையைக் குறித்துரைத்து பிரதம அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(4) மேன்முறையீட்டுச் சபை அதன் முடிவை பேரவைக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டுச் சபையின் முடிவை பெற்றதன்மேல் பேரவையானது மேன்முறையீட்டுச் சபையின் முடிவை உடனடியாக மேன்முறையீட்டாளருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டுச் சபையின் முடிவிற்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

(6) மேன்முறையீட்டுச் சபை உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பேரவையின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் V

### பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலரையும் பணியாட்டொகுதியினரையும் நியமித்தல்

பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல்.

**21.** (1) பேரவையானது, பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், பொறியியல், தொழில் நிருவாகம், முகாமைத்துவம் அல்லது வேறேதேனும் தொடர்புபட்ட கற்கையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றிலிருந்தான பட்டத்தை வைத்திருக்கும் ஆட்களிலிருந்து (இதனகத்துப்பின்னர் “பிரதான நிறைவேற்று அலுவலர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரதான நிறைவேற்று அலுவலரொருவரைப் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) பிரதான நிறைவேற்று அலுவலர், அவர் இறப்பதன்மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், ஒழுக்காற்று ஏதுக்களின்மீது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்று அலுவலர், பேரவையின் பொதுவான பணிப்புகளுக்கும் மேற்பார்வைக்கும் அமைய, -

(அ) பணியாட்டொகுதியினரை நிருவகித்தலும் கட்டுப்படுத்துதலும் உட்பட, பேரவையின் அலுவல்களின் நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் எல்லா முடிபுகளும் நிறைவேற்றப்படுவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்; அத்துடன்

(இ) பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர் பேரவையின் எவையேனும் கூட்டங்களில் சமூகமளித்து உரையாடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) பிரதான நிறைவேற்று அலுவலர், பேரவையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், பேரவையின் எவரேனும் அலுவலருக்கு அவரது தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் எழுத்தில் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தத்துவம் அல்லது பணி எந்த அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர், பிரதான நிறைவேற்று அலுவலரின் பணிப்புகளுக்கமைய அவற்றைப் பிரயோகித்தலும் அல்லது புரிதலும் வேண்டும்.

(6) பேரவையானது பின்வரும் சூழ்நிலைகளில் பிரதான நிறைவேற்று அலுவலரைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அவரது கடமைகளைப் புரிவதற்கு அவர் நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) பேரவையின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மையினதான அல்லது பேரவையின் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கும் ஏதேனும் செயலை அவர் புரிந்திருந்தால்; அல்லது

(இ) பேரவையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறினால்.

(7) பிரதான நிறைவேற்று அலுவலரின் பதவி, இறப்பின்மேல், (6) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது பேரவைக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகுவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(8) பிரதான நிறைவேற்று அலுவலர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனமொன்று செய்யப்படும்வரை பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமைகளைப் புரிவதற்கு பிரதம அமைச்சர் பேரவையின் உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.

பேரவையின் பணியாட் டொகுதி.

**22.** (1) பேரவையானது அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் ஊழியர்களும் தொடர்பில் -

(அ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து விலக்கலாம்;

(ஆ) அரசாங்கத்தின் தொடர்புபட்ட வழிகாட்டுநெறிகளுக் கிணங்க அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக் கும் ஊதியமளிக்கப்படவேண்டிய வீதங்களை நிர்ண யிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நன்மைக்காகப் பணியாட்டொகுதிச் சேமநல மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தாபிக்கலா மென்பதுடன், அத்தகைய ஏதேனும் உதவுதொகையும் செலுத்தலாம்.

(3) பேரவையானது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(4) பேரவையானது, எவ்வாறாயினும், பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனுமாள் முன்னர் ஏதேனும் பதவியை வகித்திருந்து அதிலிருந்து விலக்கப்பட்டிருந்தால், அத்தகைய ஆளைப் பேரவையின் அலுவலராக அல்லது ஊழியராக நியமித் தலாகாது.

பேரவையின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்கள் நியமிக்கப் படுதல்.

**23.** (1) பேரவையின் கோரிக்கையின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அவ்வலுவலர் எந்த அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும், பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவை யின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவை யின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளைப் பேரவை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பேரவையுடனான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பதிவாளர்.

**24.** (1) பட்டயம்பெற்ற பொறியியலாளர்களுள் ஒருவரைப் பேரவையானது பதிவாளராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பேரவையின் செயலாளராகவிருத்தலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளர், பேரவையின் உறுப்பினராகவிருத்தலாகாது.

பதிவாளரினால் இடாப்புக்கள் வைத்திருக்கப் படுதல்.

**25.** பதிவாளர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, பொருளளவில் இதற்கான அட்டவணை 'ஆ'வில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொறியியல் தொழிலர்கள் பற்றிய இடாப்புக்களைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் VI

### நிதி

பேரவையின் நிதியம்.

**26.** (1) பேரவை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன பேரவையின் நிதியத்துக்கு வரவுவைக்கப் படுதல் வேண்டும்:-

(அ) பேரவையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) பேரவை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள மூலங்களிலிருந்து கடன்களாகவும், மானியக் கொடைகளாகவும் பெறப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பேரவையானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப் பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**பேரவையானது கணக்குகளைப் பேணுதல்.**

**27.** பேரவையானது அது தோதானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் அரச வங்கியுடன் ஏதேனும் கணக்கைத் திறந்து பேணலாமென்பதுடன், அத்தகைய கணக்கு, பகிரங்கக்கூட்டுத்தாபனங்களின் நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலவுகின்ற நிதி ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தொழிற்படுதலும் வேண்டும்.

**நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.**

**28.** (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவையானது, பேரவையின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் வேறெல்லா நிதிக்கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பேரவையின் நிதிச் செயல்நிறைவேற்றம் மற்றும் நிதி நிலைமை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை முன்வைக்கும் நோக்கத்துக்காக, பேரவையானது, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காய்வாளர் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக அரசியலமைப்பினது 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பேரவையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**நிதிகளை முதலீடு செய்தல்.**

**29.** பேரவைக்குச் சொந்தமான பணங்கள், பிரதம அமைச்சரின் அங்கீகாரத்துடன் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் அரசாங்க அங்கீகாரம்பெற்ற பிணையங்களில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

**பேரவையின் கடனெடுக்கும் தத்துவங்கள்.**

**30.** (1) பேரவையானது, பிரதம அமைச்சரினதும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் எழுத்திலான சம்மதத்துடனும், மற்றும் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்கவும், பேரவையின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்குப் பேரவைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனெடுக்கலாம் அல்லது கடன்நியதிகளின் மீது பெறலாம்.

(2) இப்பிரிவின்கீழ் பேரவையினால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகையின் கூட்டுமொத்தம், பிரதம அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

## பாகம் VIII

### பொது

**ஆண்டறிக்கை.**

**31.** (1) பேரவையானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறுமாதங்களினுள், அந்நிதியாண்டின் போது பேரவையினால் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்றை பிரதம அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாண்டு தொடர்பாகப் பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்று அவ்வறிக்கையுடன் சேர்த்தனுப்பப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்:-

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்காகப் பேரவையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்;

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எவ்வாண்டு தொடர்பானவையோ அவ்வாண்டை உடனடுத்துவரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை.

(2) பிரதம அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய அறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

இரகசியம் பேணுவதற்கான வெளிப் படுத்துகை.

**32.** பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும் பேரவையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் தமது கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும் பணிகளையும் புரிவதிலும் அல்லது பிரயோகிப்பதிலும் அவரது அறிவுக் கெட்டியுள்ளவையும் பேரவையின் அலுவல்களுடன் சம்பந்தப் பட்டவையுமான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியம் பேணுவதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகை யொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் பின்வரும் சூழ்நிலைகளிற்றவிர அத்தகைய ஏதேனும் விடயத்தை வெளிவிடாதிருப்பதற்கு வாக்குறுதியளித்தலும் வேண்டும்:-

(அ) ஒரு சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) அல்லது இச்சட்டத்தின்கீழான அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கின்ற அல்லது புரிகின்ற நோக்கத்துக்காக.

பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்.

**33.** (1) பேரவையானது எழுத்திலும் அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், அதன் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அல்லது பேரவையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய எவரேனும் அலுவலர் அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பேரவையின் பெயரிலும் அதன் சார்பிலும் பிரயோகித்தலும் அல்லது புரிதலும் வேண்டும்.

(2) பேரவையானது, (1)ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியைத் தாமே பிரயோகிக்கலாம் அல்லது புரியலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கையளிப்பை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

*பிரதம அமைச்சரினாலான பணிப்புக்கள்.*

**34.** (1) பிரதம அமைச்சர், காலத்துக்குக்காலம், பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் தொடர்பாக அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களை அதற்கு எழுத்தில் வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும்.

(2) பிரதம அமைச்சர், பேரவையின் வேலை தொடர்பில் திரட்டுகள், கணக்குகள் மற்றும் வேறு தகவல் அவர் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய வடிவத்தில் அவருக்குக் கொடுத்துதவுமாறு பேரவையைப் பணிக்கலாம்.

*பேரவையின் அலுவலர்களும் ஊழியர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

**35.** பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலரும் மற்றும் அலுவலர்களும் ஊழியர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பேரவையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்படுதல்.*

**36.** இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பேரவையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

*துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கிலான செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல்.*

**37.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் பேரவையினால் அல்லது அதற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவு பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் பேரவையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது பேரவையின் எவரேனும் உறுப்பினர் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் என்போரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய ஆளுக் கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கொணரப்பட்ட ஏதேனும் துடரச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்படற்பாலனவாக இருந்தாலொழிய, பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**38.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டு மென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் பிரதம அமைச்சர் ஒழுங்குவிதிகள் ஆக்கலாம்.

(2) பிரதம அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) (அ) பிரதம அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பிரதம அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படு கின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**39.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது எக் கருமங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிகளாக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படு கின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுவுடைமைக்குப் பங்கமின்றியும் பேரவை யானது, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்:-

(அ) பொறியியல் தொழிலர்களின் பதிவுக்கட்டணம்;

(ஆ) பேரவையின் கூட்டங்களிலான நடவடிக்கைமுறை;

(இ) பேரவையின் அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தல், இடைநிறுத்துதல், பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் கடமைகளும் ஊதியமும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில், பெறுகைகளும் செலவுகளும் பற்றிய கணக்குகளை வைத்திருத்தல்;

(உ) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பொறியியல் தொழிலர்களின் வெவ்வேறு வகுதியினரின் பங்களிப் புக்கள் பொறுப்புடைமைகள், கடமைகள் மற்றும் தகுதி;

(ஊ) பொறியியல் தொழிலர்களை இடைநிறுத்தலும் அவர்களின் பெயர்களை இடாப்புக்களில் இருந்து அகற்றுதலும்; அத்துடன்

(எ) இடாப்புக்கள் எம்முறையில் பேணப்படவேண்டுமோ அம்முறை.

(3) பேரவையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்த மானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தவறுகளும்.

**40.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றி னால் புரியப்படின், அப்போது, அவ்வாட்கள் குழு–

(அ) ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின் அக்கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் வேறு அலுவலரும்;

(ஆ) ஒரு குழுமமாகவிருப்பின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ; அத்துடன்

(இ) ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழு வொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் உறுப்பின ராகவுள்ள ஒவ்வொரு தனியாளும் அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் அலுவலர் ஒவ்வொருவரும்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆளெவரும், அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தவறு புரியப் படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும்

தாம் பிரயோகித்தாரென்று எண்பித்தால், தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

பொருள் கோடல்.

**41.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய:-

"பொறியியல் தொழிலர்" என்பது, இதற்கான அட்டவணை 'அ' வில் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த தகைமைகளைக் கொண்டவரான -

(அ) ஒரு பட்டயம்பெற்ற பொறியியலாளர்;

(ஆ) ஓர் இணைப் பொறியியலாளர் ;

(இ) ஒரு சேர்நிலைப் பொறியியலாளர்;

(ஈ) ஒரு கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்;

(உ) ஒரு பொறியியல் டிப்புளோமாதாரி ; அல்லது

(ஊ) ஒரு பொறியியல் தொழினுட்பவியலர்,

என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**42.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(பிரிவு 15)

## அட்டவணை ‘அ’

### பொறியியல் தொழிலர்களின் தகைமைகள்

| பொறியியல் தொழிலர் | தகைமைகள் |
|---|---|
| பட்டயம்பெற்ற பொறியியலாளர் | 1968 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப் பட்டவருமான பட்டயம்பெற்ற பொறியியலாளர். |
| இணைப் பொறியியலாளர் | 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொறியி யலில் நான்காண்டு முழுநேரப் பட்டம் அல்லது 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினதும் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப் பட்டவருமான இணை உறுப்பினரொருவர். |
| சேர்நிலைப் பொறியியலாளர் | 1968 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும் பேரவை யினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதுமான பொறியியலில் மூன்றாண்டு முழுநேரப் பட்டம். |
| கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் | 1992 ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டி ணைத்தல்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகத்தினதும் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டவருமான கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர். |
| பொறியியல் டிப்புளோமாதாரி | 1992 ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது தொழினுட்ப அல்லது தொழினுட்பவியல் நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட தும் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதுமான பொறியியல் டிப்புளோமா. |

| | |
|---|---|
| பொறியியல் தொழினுட்பவியலர். | (i) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம்நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம்நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப் பட்டதும் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப் பட்டதுமான பொறியியல் தொழினுட்பவியலின் தேசியத் தொழிற்சார் தகைமை மட்டம் IV அல்லது சமமான தகைமை. |
| | (ii) பொறியியல் தொழினுட்பவியலில் ஓராண்டு முழுநேரக் கல்விக் கற்கைநெறி மற்றும் இயைபான துறையில் ஓராண்டுக் கைத்தொழில் அனுபவத்தைப் பெற்றவர் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஒரு தொழினுட்ப அல்லது தொழினுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான டிப்புளோமாவை அல்லது தொழினுட்பவியற் சான்றிதழை வைத்திருப்பவர். |

***(பிரிவு 25)***

***அட்டவணை 'ஆ'***

***பொறியியல் தொழிலர்கள் பற்றிய இடாப்புக்கள்***

***பாகம் I***

***பட்டயம்பெற்ற பொறியியலாளர்கள், இணைப் பொறியியலாளர்கள் மற்றும் சேர்நிலைப் பொறியியலாளர்கள் பற்றிய இடாப்பு***

| பதிவிலக்கம் | பெயர் | முகவரி | பதிவுத்தேதி | தகைமைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

***பாகம் II***

***கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் மற்றும் பொறியியல் டிப்புளோமாதாரிகள் பற்றிய இடாப்பு***

| பதிவிலக்கம் | பெயர் | முகவரி | பதிவுத்தேதி | தகைமைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

பாகம் III

**பொறியியல் தொழினுட்பவியலர்கள் பற்றிய இடாப்பு**

| பதிவிலக்கம் | பெயர் | முகவரி | பதிவுத்தேதி | தகைமைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*